நசி, எவ், எண்: 768

# செய்தி வெளியீடு – 29.10.2009

கோவையில், 2010ஆம் ஆண்டு சூன் திங்கள் 24 ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை நான்கு நாட்கள் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்திட தமிழ்நாடு அரசு முடிவு செய்து ஆணையிட்டுள்ளதைத் தொடர்ந்து ஆய்வரங்கப் பணிகளை மேற்கொள்ள ஆய்வரங்க அமைப்புக் குழுவினை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது. இதுகுறித்த விவரம் பின்வருமாறு :–

| | | |
|---|---|---|
| தலைவர் | – | பேராசிரியர் முனைவர் கா. சிவத்தம்பி |
| துணைத் தலைவர்கள் | – | முனைவர் ஔவை. நடராசன்<br>முனைவர் பொன். கோதண்டராமன் |
| செயலாளர் | – | கவிஞர் கனிமொழி,<br>மாநிலங்களவை உறுப்பினர் |
| ஒருங்கிணைப்பாளர் | – | முனைவர் ம. இராசேந்திரன்,<br>துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்,<br>தஞ்சாவூர் |

ஆய்வரங்கப் பணிகளை திட்டமிடவும், செயல்படுத்திடவும், துணைத் தலைவர்களையும், துணைக் குழுக்களையும் அமைத்துக் கொள்ளவும் ஆய்வரங்க அமைப்புக் குழுவிற்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிட்டுள்ளது. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி அனைத்து ஆய்வரங்கப் பணிகளையும் இக்குழு மேற்கொள்ளும்.

* * *

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை -9

கா. அலாவுதீன் இ.ஆ.ப
தனி அலுவலர்
உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு
கோவை - 2010.